SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 3. TML1142 - பெரியபுராணத்தில் மகளிரும் விருந்தோம்பலும்

முனைவர் ந.மு.கவிதா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (துன்னாட்சி),
ஈரோடு–12.

## முன்னுரை

*தமிழரின் தலையாயப் பண்பாட்டுக் கூறு விருந்தோம்பல். தமிழர் வாழ்க்கை முறையில் விருந்தினரை உபசரிப்பது ஒவ்வொரு தலைவன், தலைவியின் தலையாயக் கடமையாகச் சங்க காலத்தில் போற்றப்பட்டது. இல்லற அறத்தில் விருந்தினரைப் பேணுதல் முக்கியக் கடமை. இதற்கான சான்றுகள் சங்க இலக்கியத்தில் ஏராளமாகக் காணக்கிடக்கிறது. விருந்து என்றால 'புதுமை' என்று பொருள். வீட்டிற்கு வரும் புதியவர்களுக்கு உணவு அளித்தல் விருந்தோம்பல் ஆகும். தமது இல்லத்திற்கு வருகைதரும் விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்று தேவையான உபசரிப்புகளை செய்திடல் மனிதநேயத்தின் முதன்மைத்தன்மை என்பதைப் பெரியபுராணத்தில் மகளிர்களின் செயல்களினால் அறிகின்றோம்.*

## விருந்தோம்பல்

*ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் இல்லற வாழ்வில் விருந்தோம்பல் சிறந்த அறமாகக் கருதப்படுகிறது. வள்ளுவர் இதனை ஒரு சமூக அறமாகக் கருதி விருந்தோம்பலுக்குத் தனி அதிகாரமே வகுத்துள்ளார். நம் இல்லற வாழ்வின் அடிப்படை நோக்கமே விருந்தோம்பல் செய்து சமூகத்துக்குத் துணை நிற்பது தான் என்பது வள்ளுவரின் கருத்து.*

*அதனால் விருந்தோம்பலின் இன்றியமையாமையை,*

''இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு'' (1)

*என்ற குறளில் கூறியுள்ளார். விருந்தோம்பல் என்பது விருந்தினரை மகிழ்வோடு வரவேற்றல் மட்டுமல்ல. அவர்கள் விருந்துண்டு விடைபெற்றுச் செல்லும் போது கூடவே நடந்து சென்று வழி அனுப்ப வேண்டும்.*

''காலின் ஏழடிப் பின் சென்று
கோல்இன் தாறு களைந்து ஏறு'' (2)

*என்ற வரிகளின் வழி விருந்தோம்பல் பண்பை அறியமுடிகிறது.*

''விருந்தே தானும் புதுவது கிளர்ந்த
யாப்பின் மேற்றே'' (3)

*'விருந்து' என்பதற்கு, 'புதுமை' என்று பொருள். புதிதாய் வந்தோர்க்கு உணவு கொடுத்தல் என்று அகராதி கூறுகிறது. "அறிமுகமானவர்களும் விருந்தினர்களாக வருவர், அறியாதவர்களும் வருவர். ஆனாலும் விருந்து என்பதற்கு, 'புதிது' என்றும், 'விருந்தினர்' என்பதற்கு, 'புதியவர்' என்றுமே பொருள். எத்தனை முறை வந்தாலும் சரி, பழகி அவர்களை எல்லாம் புதியவராக எண்ணிப் போற்ற வேண்டும் என்னும் விழுமிய எண்ணத்தால் எழும்பியதே இச்சொற்கள் போலும்"(4) என்கிறார் இரா. இளங்குமரனார். இதனைத் தான் வள்ளுவர்,*

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். (5)

*பண்பாட்டுக் கூறுகளுள் நம் வாழ்வோடு இயைந்தும் இணைந்தும் விளங்குவது விருந்தோம்பலாகும். இப்பண்பு தொன்றுதொட்டு இருந்து வரும் பழக்கமாக உள்ளது. இறப்பிலிருந்து நம்மைக் காக்கும் மருந்தாக இருந்தாலும் விருந்தினரைப் புறக்கணித்து உண்ணக் கூடாது என்ற உயர்ந்த மாண்பை,*

''விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று'' (6)

*என்ற குறள் எடுத்துரைக்கிறார் வள்ளுவர். இதனையே*

''**.......** இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியரும் உண்டலும் இலரே'' (7)

*என்று புறநானூறு கூறுகின்றது.*

**பெரியபுராணத்தில் விருந்தோம்பல்**

*தமிழ் இலக்கியம் தன்னகத்தே பல வடிங்களிலும், பொருண்மைகளிலும் இலக்கியங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள், பக்தி இலக்கியமானது "தமிழ் பக்தியின் மொழி" என்று குறிப்பிடும் அளவிற்கு சிறப்பான இடத்தை பெற்றுள்ளது. பக்தி இலக்கியங்களில் சைவம் தொடர்பான நாயன்மார்களின் வரலாற்றினைக் கூறும் சேக்கிழார் எழுதிய பெரியபுராணம். பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடிய நூல். அறுபத்தி மூன்று நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுவதோடல்லாமல் அக்கால சமூகம், பண்பாடு, பழக்கவழக்கம் ஆகியவற்றையும் சிறப்புற விளக்குகின்ற தமிழகத்து வரலாற்றுக் களஞ்சியம் என்றால் மிகையாகாது. பக்தியும் பண்பாடும் கலந்து சிறந்த நூலாகவும் திகழ்கின்றது. .*

*மனிதநேயம் என்பது மனிதனின் ஆளுமைப் பண்புகளை மதிக்கவும், அவனது நலன்களைப் பேணிக்காக்கவும், சமூக வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் முழுமையான வளர்ச்சியை மனிதன் பெறவும் துணைபுரிவதாகும். மனிதநேயச் சிந்தனைகளின் களஞ்சியமாகத் திகழும் பெரிய புராணத்தில் வலம் வரும் மகளிர்கள் அடியவர்களுக்கு விருந்தோம்பிய தன்மை போற்றுதலுக்குரியது.*

**இளையான்குடிமாற நாயனாரின் மனைவி**

*ஒருவர் செல்வம் உள்ளபோது எவ்வாறு விருந்தோம்புகிறாரோ அதேபோல் வறுமை மிக்க காலத்திலும் விருந்து படைத்து மகிழ வேண்டும். அதுவே மிகுந்த சிறப்பைத் தரும். அவ்வாறு வறுமையிலும் விருந்தோம்பி பெருமை பெற்றவர்கள் இளையான்குடிமாற நாயனாரும் அவரது மனைவியும் ஆவர்.*

*விருந்தோம்பலுக்குப் பொருட் செல்வம் இல்லை என்றாலும், நல்உள்ளம் இருந்தாலே போதும். செல்வம் மிகுதியாக இருந்தபோது விருந்தினருக்கு அவர் மனம் மகிழ விருந்து படைத்து மகிழ்ந்தது போலவே, செல்வம் சுருங்கி வறுமையில் வாடும்போதும் விருந்து படைத்து மகிழ்தல் திறமையாகும். இது மிகப் பெரிய சிறப்பாகும். அத்தகு சிறப்பினைப் பெற்றவர்கள் இளையான்குடிமாற நாயனாரும் அவரது மனைவியும்.*

*இளையான்குடி என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் பிறந்தவர் மாறனார். இவர் மிகுந்த செல்வம் நிரம்பியவராக இருந்தார். சிவபக்தியில் திளைத்த இவர் சிவனடியார்களுக்கு உணவளிப்பதையே தன் வாழ்வில் பெருந்தொண்டாகச் செய்து வந்தார். இளையான்குடிமாற நாயனார் செல்வச் செழிப்பாக வாழ்ந்த போது தன்னைத் தேடி வந்த அடியவர்களுக்கு விருந்து படைத்த விதத்தினை,*

''கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்துள்ளார்'' **(இளையான்.13)**

*என்ற சேக்கிழாரின் வரிகள் வழி அறியலாம். நான்கு விதமான உணவு, ஆறு விதமான சுவையில்... மொத்தம் 24 வகையான உணவு. (6 x 4) வகையான உணவுகளை "மண்டு காதலினால் " தொண்டருடைய இச்சைபடி அமுது செய்து அளித்துள்ளார்.*

*இவரது தொண்டை உலகுக்கு உணத்துவதற்காகச் சிவபெருமான் மாறனாருக்கு வறுமையை உண்டாக்கினார். அப்போதும் தன் தொண்டினைச் சிறப்பாகச் செய்து வந்தார் மாறனார். அவரைச் சோதிக்க எண்ணிய சிவபெருமான் சிவனடியார் வேடம் பூண்டு ஒரு மழைக்காலத்து இரவு நேரத்தில் மாறனார் இல்லத்திற்கு வந்தார். இதனைச் சேக்கிழார்,*

''மாரிக் காலத்து இரவினில் வைகியோர்
தாரிப்பு இன்றிப் பசிதலைக் கொள்வது
பாரித்து இல்லம் அடைந்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்து எதிர் கொண்டான்'' (பெரிய.இளையான்.9)

*என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார். செல்வம் இல்லாத காலத்திலும் பண்போடு விருந்தினரை எதிர்க்கொண்டு அழைத்த பாங்கினையும் இப்பாடல் வரிகள் மூலம் காணமுடிகிறது.*

**மந்திரியாகிய மனைவி**

*மழைபொழியும் இரவு நேரம். வீட்டில் உணவு படைக்க எதுவுமற்ற நிலை. பகலில் வந்திருந்தால் எப்படியேனும் உணவு படைத்திருப்பர். பக்கத்து வீட்டிலும் கேட்க முடியாத சூழல். என்ன செய்வது எனப் புரியாமல் நாயனார் தவித்தார். கணவன் குழம்பித் தவிக்கையில் நல்ல தீர்வு சொல்பவளே சிறந்த மனைவி. தக்க சமயத்தில் மன்னனுக்கு அறிவுரை கூறும் மந்திரி போன்றவள். அவர் மனைவியும் மந்திரியானாள். தன் கணவரிடம்,*

''செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலும் ஆகும் மற்று
அல்ல தொன்றறி யேன்'' **(இளையான்.13)**

*என்று கூறி, வயலில் விதைத்திருந்த விதை நெல்லை கொண்டு வரச் செய்து அதில் உணவு சமைத்தார்.*

**சிவபெருமான் காட்சி அளித்தல்**

*உணவு சமைத்து முடித்தபின், மாறனார் அடியவரை அழைக்கச் சென்றார். அடியவர் சோதி வடிவாய்த் தோன்றி திருக்காட்சி நல்கி, சிவலோகத்தை அடையுமாறு அருள் புரிந்தார்.*

''மால் அயற்கு அரிய நாதன் வடிவு ஒரு சோதி ஆகச்
சாலவே மயங்குவார்க்குச் சங்கரன் தான் மகிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோடு இடப வாகனன் ஆய்த் தோன்றிச்
சீலம் ஆர் பூசை செய்த திருத் தொண்டர் தம்மை நோக்கி.

*சிவபெருமான் தோன்றி மாறனாருக்கு அருள் புரிந்த செயலை அறியமுடிகிறது. வறுமையிலும் விருந்து படைத்த பண்பை இளையான்குடிமாற நாயனாரின் மூலம் அறியலாம்.*

**ஏயர்கோன் மனைவியாரின் விருந்தோம்பல்**

*சுந்தரர் பரவையாரை விரும்புகின்றார். அவரிடம் இறைவனைத் தூதாக அனுப்புகின்றார். இதனால் ஏயர்கோன் கலிக்காம நாயனார் சுந்தரரைச் சினக்கின்றார். அதனால் இறைவன் கலிக்காமருக்குச் சூலைநோயைக் கொடுக்கிறார். இந்நோயை தீர்ப்பவர் சுந்தரர் என்பதை அறிந்து, தன்னை மாய்த்துக் கொள்ளத் துடிக்கிறார் ஏயர்கோன். அப்பொழுது சுந்தரர் இவர் இல்லத்திற்கு வருகிறார். தன் துன்பத்தை மறைத்து விருந்தினராக வந்திருக்கும் சுந்தரரை இன்முகத்துடன் வரவேற்கிறார் ஏயர்கோனின் மனைவி.*

''கணவர்தம் செய்கைத ன்னைக் கரந்து காவலரை நம்பி
அணைவுறும் பொழுதுசால அலங்கரித்து எதிர்போம் என்னப்
புணர்நிலை வாயில் தீபம் பூரணகும்பம் வைத்துத்
துணர்மலர் மாலை தூக்கித் தொழுது எதிர்கொள்ளச் சென்றார்'' **(பெரிய.ஏயர்.399)**

*என்ற பாடலில் ஏயர்கோனின் மனைவி தன் துன்பத்தை மறைத்து சுந்தரரை வரவேற்ற பாங்கினை அறியலாம்.*

**காரைக்கால் அம்மையாரின் விருந்தோம்பல்**

*பரமதத்தனின் இல்வாழ்க்கை துணைவியான புனிதவதி அம்மையார் சிவபெருமானின் மீது இளமை முதல் காதல் கொண்டு மேன்மேலும் பெருகும் இல்லறத்தின் மாண்பு பிறழாதபடி ஒழுகி தம்முடைய வீட்டுக்குச் சிவனடியார்கள் வரின், அவர்களைத் திருவமுது செய்வித்து, அவரவர் வேண்டியபடி பொன் இரத்தினம் வஸ்திரம் முதலாயின உதவுவார்.*

*அப்படி வாழுங் காலத்தில் வாணிபஞ் செய்யுமிடத்தில் இருந்தபோது அவரை காண வந்தவர்கள் இரண்டு இனிய மாங்கனிகளை தந்தார்கள் அவர் அவற்றை பணியாட்கள் மூலம் இல்லத்துக்கு கொடுத்தனுப்பினார் அம்மையாரும் அக்கனிகளை வாங்கி வைத்தார் அவ்வமயம் ஒரு திருத்தொண்டர் அங்கு வந்தார் இறை அடியவரைக் கண்டதும் அவருக்கு அமுதளிக்கும் பொருட்டு இருந்தார் அதற்கு சிறிது கால தாமதமாகும் என்று கணவர் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை படைத்தார் மூப்பும் பசியும் மிக்க அடியவர் உண்டு களித்து அம்மையாரை வாழ்த்திச் சென்றார்*

*அடியவருக்கு விருந்து அளித்து உபசரித்த பாங்கே அவரை நாயன்மார்களில் ஒருவராக வலம் வரசெய்தது. அம்மையப்பர் இல்லாதவரும் உலகுக்கே அம்மையப்பராகவும் உள்ள அரனார் அம்மையே என்று அழைக்க பெற்று அவருடைய திருநடனத் திருவடியின் கீழ் என்றும் இருக்க பெற்ற அம்மையாருடைய பெருமையை அளக்க அகில உலகத்திலும் ஆளில்லை.*

### முடிவுரை

*விருந்தினர்களை உபசரித்தல், அடியாருக்கு அமுது படைத்தல், வறியாருக்கு தேவையானவற்றை அளித்தல், இன்முகத்துடன் இல்லத்திற்கு வரும் அனைவரையும் வரவேற்பது எனப்பல நிலைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருத்தொண்டர் புராணம் என அழைக்கப்பெறும் பெரியபுராணத்தில் இத்தகைய மனிதநேயப் பாங்குகள் நிறைந்து காணப்பெறுகின்றன என்பதற்கு, பெண் அடியார்களின் விருந்தோம்பல் பண்பையே சான்றாக கொள்ளலாம்.*

*புராணங்களில் மட்டுமல்லாது இன்று நாம் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய சிறந்த அறம் விருந்தோம்பலாகும். இன்று மிகப் பெரிய உணவு விடுதிகளில் இந்த அறத்தை ஒரு கலையாக வணிக நோக்கில் வளர்த்து வருகின்றனர். தங்களுடைய உணவு விடுதிக்கு வரும் வாடிக்கையாளர்களை இன்முகத்தோடு வரவேற்று உபசரிக்கின்றனர். அதற்கென பணியாளர்களை நியமித்துள்ளனர். ஆனால் விருந்தோம்பல் என்பது நம் வாழ்வியலோடு இணைந்து விளங்கும் பண்பாக மலர வேண்டும்.*

### அடிக்குறிப்புகள்

1. *திருக்குறள்.81*
2. *பொருநராற்றுப்படை,166–167*
3. *தொல்காப்பியம் –பொருளதிகாரம் நூற்பா எண் 1495*
4. *இரா. இளங்குமரனார், இலக்கண வரலாறு,ப.24.*
5. *திருக்குறள்.84*
6. *திருக்குறள்.82*
7. *புறநானூறு.182*

### துணை நூற்பட்டியல்


1. *திருக்குறள், பாரிநிலையம், சென்னை.*
2. *பத்துப்பாட்டு, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.*
3. *தொல்காப்பியம், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.*
4. *பெரியபுராணம், கௌரா பதிப்பகம், சென்னை.*
5. *புறநானூறு, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.*
6. *இரா. இளங்குமரனார், இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.*